## நாடு முழுவதும் கோடிக்கணக்கான போலி வாக்காளர்கள்!

# மோடி அலையா...மோசடி அலையா...?

## ராகுல் காந்தியின் குற்றச்சாட்டுக்கு தேர்தல் ஆணையத்தின் பதில் என்ன?

கடந்த 2014ஆம் ஆண்டில் நாடு முழுவதும் வீசிய மோடி அலையில் மத்தியில் பா.ஜ.க. தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி அமோக வெற்றி பெற்றது. அடுத்த 10 ஆண்டுகளுக்கு மேலாகியும் பா.ஜ. கூட்டணி ஆட்சியை வீழ்த்த முடியவில்லை. 2014க்குப் பிறகு மோடி அலையை வைத்து உ.பி. உள்ளிட்ட பல மாநிலங்களில் பா.ஜ. ஆட்சியை பிடித்தது. ஆனால், அடுத்த 5 ஆண்டுகளில் மோடி அலை வீரியத்தை இழக்கத் தொடங்கியது. 2019 மக்களவைத் தேர்தலில் மோடி அலை வலுவிழுந்த நிலையில், 2024 மக்களவைத் தேர்தலில் மோடி அலை குறித்த பேச்சுகள் சுத்தமாக அடங்கின.

ஆனாலும் கூட பா.ஜ.வின் வெற்றி அசாதாரணமாகவே இருந்தது. ஒவ்வொரு தேர்தலுக்கு முன்பாகவும் கருத்துக்கணிப்புகள் வெளியாகும். பலமான போட்டி இருக்கும் என கணிக்கப்படும், சில இடங்களில் காங்கிரஸ் வெற்றி பெறும் என கணிக்கப்படும். ஆனால் கடந்த 11 ஆண்டுகளில் பா.ஜ.வுக்கு எதிரான கருத்துக்கணிப்புகள் தவிடு பொடியான உதாரணங்கள் ஏராளம் உண்டு. கடந்த 2024 மக்களவைத் தேர்தலில் காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து இந்தியா கூட்டணியாக எதிர்த்த போதிலும் பா.ஜ. வெற்றி பெற் றது. பா.ஜ. கூட்டணி 292 இடங்களில் வெற்றி பெற்று ஆட்சியை பிடித்தது. இந்தியா கூட்டணி 230 தொகுதிகளை கைப்பற்றி நெருங்கி வந்தது.

### தீர்வு என்ன?

போலி வாக்காளர் பிரச்சினைக்கு ஒரே நிரந்த தீர்வு வாக்காளர் பட்டியலுடன் ஆதார் எண்களை இணைப்பதே என்கின்றனர். அரசியல் நிபுணர்கள் ரேஷன் முதற்கொண்டு எல்லாவற்றுக்கும் ஆதாரை கட்டாயமாக்கும் ஒன்றிய அரசு, வாக்களிக்கவும் ஆதாரை கட்டாயமாக்கினால், ஒரே நபரின் பெயர் ஒன்றுக்கும் மேற்பட்ட இடங்களில் இருக்கும் பிரச்சினைக்கு தீர்வு கண்டு விடலாம். மேலும், போலி வாக்காளர்களையும் ஆதாரை கொண்டு எளிதாக கண்டுபிடித்து விடலாம். இதை ஏன் ஒன்றிய பா.ஜ. அரசு செய்யத் தயங்குகிறது என்பது ராகுல் காந்தியின் விளக்கத்திற்குப் பிறகு வெட்ட வெளிச்சமாகி உள்ளது.

ஒவ்வொரு தேர்தலிலும் தோற்கும் போதும், ஏதோ தவறு நடப்பதாக மனதுக்குள் சந்தேகம் இருந்து கொண்டே இருந்ததாக காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல் காந்தி கூறியிருக்கிறார். இது அனைத்து எதிர்க்கட்சி தலைவர்கள் மனதிலும் இருந்த சந்தேகம், இந்த விஷயத்தை காங்கிரஸ் தீவிரமாக கண்காணிக்கத் தொடங்கியது. கடந்த 2024 மக்களவைத் தேர்தல், அதன் பின்



| டாப்-5 மாநிலங்கள் | |
|---|---|
| வாக்காளர் எண்ணிக்கையில் முதல் 5 இடங்களில் உள்ள மாநிலங்கள்: | |
| மாநிலங்கள் | எண்ணிக்கை |
| உத்தரப்பிரதேசம் | 15.3 கோடி |
| மகாராஷ்டிரா | 9.8 கோடி |
| பீகார் | 7.8 கோடி |
| மேற்கு வங்கம் | 7.6 கோடி |
| தமிழ்நாடு | 6.3 கோடி |

நடந்த மகாராஷ்டிரா, அரியானா தேர்தல் முடிவுகளில் அதிக கவனம் செலுத்தியது. இந்த தேர்தல்களை வைத்து ஆய்வு நடத்தியதில் தேர்தல் செயல்பாட்டிலேயே மிகப்பெரிய மோசடி நடந்தது கண்டறியப்பட்டிருப்பதாக ராகுல் காந்தி செய்தியாளர்களிடம் ஆதாரங்களுடன் விளக்கிய சம்பவம்தான் இப்போது தேசிய அரசியலில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

கடந்த 2023ல் கர்நாடகாவில் நடந்த சட்டப் பேரவை தேர்தலில் காங்கிரஸ் 135 இடங்களில் வென்று ஆட்சியை பிடித்தது. பா.ஜ. 66 தொகுதிகளில் மட்டுமே வென்றது. இதனால் 2024 மக்களவைத் தேர்தலில் கர்நாடகாவில் காங்கிரஸ் 16 தொகுதிகளை கைப்பற்றும் என கருத்துக் கணிப்புகள் ஆணித்தரமாக கூறியிருந்தது. ஆனால் காங்கிரஸ்க்கு கிடைத்தது 6 தொகுதிகள் மட்டுமே.



ஒரே ஆண்டில் தலைகீழ் மாற்றம், மகாராஷ்டிராவில் 2024 மக்களவைத் தேர்தலில் இந்தியா கூட்டணி 30 தொகுதிகளை கைப்பற்றி மகத்தான வெற்றியை பதிவு செய்தது. பா.ஜ. கூட்டணி 17 இடங்களுடன் பெரும் பின்னடைவை சந்தித்தது. மக்களவைத் தேர்தல் முடிந்து அடுத்த 5 மாதத்தில் நடந்த சட்டப்பேரவை தேர்தலில் இந்தியா கூட்டணியில் இருந்த காங்கிரஸ், சிவசேனா, தேசியவாத காங்கிரஸ், இடதுசாரிகள் இணைந்து போட்டியிட்டும் குறிப்பிடத்தக்க வெற்றியை பதிவு செய்ய முடிய வில்லை. பா.ஜ. 132 இடங்களை கைப்பற்றி அவர்கள் தலைமையிலான கூட்டணி ஆட்சியை கைப்பற்றியது.

இதே போல அரியானாவில் ஆளுங்கட்சியாக இருந்த பா.ஜ. மீது கடும் அதிருப்தி நிலவியது. மக்களவைத் தேர்தலில் கூட பா.ஜ.வும், காங்கிரசும் தலா 5 தொகுதிகளை கைப்பற்றி இருந்தன. அரியானாவில் விவசாயிகள் பா.ஜ. மீது கடும் அதிருப்தியில் இருந்தனர். இப்படிப்பட்ட சூழலில் 2024ல் நடந்த சட்டப் பேரவைத் தேர்தலில் காங்கிரஸ் கட்டாயம் வெற்றி பெறும் என ஒட்டுமொத்த கருத்துக்கணிப்புகளும் கூறியிருந்தன. புதிய ஆட்சியில் யாரை முதல்வராக நியமிப்பது என்பதை ஆலோசிக்கும் அளவுக்கு காங்கிரஸ் நம்பிக்கையுடன் இருந்தது. ஆனால் அத்தனையையும் வாரி சுருட்டி, பா.ஜ.க. 48 தொகுதிகளை கைப்பற்றி தனிப்பெரும்பான்மையுடன் ஆட்சி அமைத்தது. இது பா.ஜ.வினர் கூட எதிர்பார்க்காத முடிவாக இருந்தது.

இந்த 3 சம்பவங்களுக்குப் பிறகுதான் வாக்கு இயந்திரத்தை தாண்டி வேறு ஏதோ வழியில் தவறு நடப்பதை காங்கிரஸ் உணர்ந்தது. மகாராஷ்டிராவில் வாக்குப்பதிவின் கடைசி ஒரு மணி நேரத்தில் பல லட்சம் வாக்குகள் பதிவாகி இருந்தன .இதனால், 5 ஆண்டுகளுக்குப் பிறகு வாக்கு சதவீ தத்தில் திடீரென பெரிய ஏற்றம் ஏற்பட்டது. 5 மாதங்களில் சேர்க்கப்பட்ட புதிய வாக்காளர்களின் எண்ணிக்கை கடந்த 5 ஆண்டுகளில் சேர்க்கப் பட்ட மொத்த வாக்காளர்களின் எண்ணிக்கையை விட அதிகமாக இருந்தது. 18 வயதுக்கு மேற்பட்டவர்களின் மக்கள் தொகையை விட வாக்காளர் எண்ணிக்கை அதிகமாக இருந்தது. இதிலிருந்து நூல் பிடித்த காங்கிரஸ், வாக்காளர் சேர்க்கையில் என்ன நடக்கிறது என்பதை ஆராயத் தொடங்கியது. அப்போதுதான் மகாராஷ்டிராவில் 40 லட்சம் போலி வாக்காளர்கள் இருப்பது கண்டறியப்பட்டது.இதை சும்மா சொன்னால் ஒப்புக் கொள்ள மாட்டார்களே, ஆதாரம் கேட்பார்களே என்பதால் கர்நாடகாவில் ஆய்வுப் பணி மேற்கொண்டது. ஒருபானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்கிற மாதிரி, பெங்களூருவில் உள்ள மகாதேவபுரா சட்டப்பேரவை தொகுதி வாக்காளர்கள் பட்டியலை அலசி ஆராய்ந்தது. பெங்களூரு மத்திய மக்களவைத் தொகுதியில் மகாதேவ்புரா சட் டப்பேரவை தொகுதி முடிவு மட்டுமே காங்கிரசின் தோல்விக்கு காரணமாக அமைந்ததால் அந்த தொகுதி ஆய் வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதற்காக தேர்தல் ஆணையத்திடம் வாக்காளர் விவரங்களை கேட்ட போது 7 அடி உயரத்திற்கு கட்டுகட்டாக ஆவணங்களை தந்தது. யாரும் எளிதில் புள்ளிவிவரங்களை ஆராய்ந்து விடக்கூடாது என்பதற்காக கணினியில் ஆய்வுக்கு உட்படுத்தும் வகையிலான ஆவணங்களை தருவதற்கு பதிலாக காகித ஆவணங்களாக கொடுத்தது. இந்த ஆவணங்களை ஒவ்வொன்றாக ஆராய்ந்து ஒவ்வொரு வாக்காளர்களையும் அவர்களின் வீடுகளுக்கு சென்று சரிபார்த்தது காங் கிரஸ். இதற்காக 6 மாத காலம் இரவு பகலாக உழைத்துள்ளனர். இந்த கடின ஆய்வில் தான் பயங்கரமான சம்பவம் அம்பலமாகி உள்ளது.

மகாதேவபுரா சட்டப்பேரவை தொகுதியில் உள்ள 6.5 லட்சம் வாக்காளர்களில் 1 லட்சம் போலி வாக்காளர்கள் இருப்பது தெரியவந்துள்ளது. வெவ்வேறு வாக்குச்சாவடிகளிலும் வெவ்வேறு மாநிலங்களிலும் வாக்களித்த சுமார் 11 ஆயிரம் வாக்காளர்கள் கர்நாடகாவில் வாக்களித்துள்ளனர். ஒரே வாக்காளர், பெங்களூருவில் உள்ள மகாதேவபுரா தொகுதியிலும், உபியின் கிழக்கு லக்னோவிலும், மும்பையில் கிழக்கு ஜோகேஸ்வரி தொகுதியிலும் வாக்காளராகப் பதிவு செய்யப்பட்டுள்ளார். ஒரே வீட்டு முகவரியில் 80 மற்றும் 46 வாக்காளர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளனர். தொழிற்சாலை முகவரியில் மட்டும் 68 வாக்காளர்கள் இருப்பதாக சொல்கிறது வாக்காளர் பட்டியல், கதவு எண், தெரு எண் பூஜ்ஜியம் என குறிப்பிட்டு ஆயிரக்கணக்கான வாக்காளர்களை சேர்த்துள்ளனர்.

### மகாராஷ்டிராவில் மாறிய எண்ணிக்கை

மகாராஷ்டிராவில் கடந்த 2024 ஏப்ரலில் மக்களவைத் தேர்தல் நடந்த போது மொத்த வாக்காளர்கள் எண்ணிக்கை 9 கோடி 29 லட்சத்து 43 ஆயிரத்து 890. இதுவே, 2024 நவம்பரில் சட்டப்பேரவை தேர்தல் நடக்கும் போது மொத்த வாக்காளர்கள் எண்ணிக்கை 9 கோடியே 70 லட்சத்து 25 ஆயிரத்து 119. 6 மாத இடைவெளியில் சுமார் 40 லட்சம் வாக்காளர் எண்ணிக்கை அதிகரிப்பு.

ஒரே முகவரியில் 10,452 போலி வாக்காளர்கள் சேர்க்கப்பட்டனர். புதிய வாக்காளராகப் பதிவு செய்யப் பயன்படுத்தப்படும் படிவம் 6. பெருமளவில் தவறாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. முதன் முறை வாக்காளராக ராணி என்ற 20 வயது மூதாட்டி ஒருவரை சேர்த்துள்ளனர். 70 வயதுக்கு மேற்பட்ட பலர் முதல் முறை வாக்காளர்களாக சேர்க்கப்பட்டுள்ளனர். இதுபோன்ற 33,692 முறைகேடுகள் கண்டறியப்பட் டுள்ளன. 40 ஆயிரத்துக்கும் மேற்பட்ட போலி வாக்காளர்களின் முகவரிகள் தவறானவை அல்லது முகவரிகள் இல்லை அல்லது அந்த முகவரிகளில் அவர்கள் வசிக்கவில்லை. குர்கிராத் சிங் டாங் என்பவர் பெயர் 4 வாக்குச் சாவடிகளில் ஒரே போட்டோ, ஒரே பெயருடன் இடம் பெற்றிருக்கிறது.

போலி மற்றும் தவறான முகவரிகள் மூலம் 40,000 வாக்காளர்கள் சேர்க்கப்பட்டனர்.

### கட்சிகளுக்கும் பொறுப்பு உண்டு

வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல், நீக்குதல் நடவடிக்கைககள் எப்போதும் நடந்து கொண்டுதான் உள்ளன. ஒவ்வொரு 3 மாதத்திற்கு ஒருமுறை புதுப்பிக்கப்பட்ட வாக்காளர் பட்டியலை தேர்தல் ஆணையம் அதன் இணையதளத்தில் பகிரங்கமாக வெளியிடுகிறது. இதை தவிர தேர்தலுக்கு முன்பாக வரைவு வாக்காளர் பட்டியலும் வெளியிடப்படுகிறது. இந்த பட்டியலை பெரும்பாலான அரசியல் கட்சிகள் ஆய்வு செய்வதில்லை. ஒவ்வொரு அரசியல் கட்சிகளும் தங்களின் வாக்குச்சாவடி முகவர்கள் மூலமாக புதிதாக சேர்க்கப்பட்ட வாக்காளர்கள், நீக்கப்பட்டவர்கள் குறித்து வீடு வீடாக சென்று சரிபார்க்க வைத்தால் போலிக்கான வாய்ப்புகளே இருக்காது. ஏதேனும் தவறுகள் இருப்பின் உடனுக்குடன் தேர்தல் ஆணையத்திடம் முறையிட்டு தவறுகளை தடுக்க முடியும். இந்த வகையில் போலி வாக்காளர்களை ஒழிக்க அரசியல் கட்சிகளுக்கும் பொறுப்புண்டு என்பதை அனைவரும் உணர வேண்டும்.

தவறான போட்டோக்களுடன் 4132 பேர் வாக்காளர்களாக்கப்பட்டுள்ளனர். ஒரே படுக்கை கொண்ட வீட்டில் மட்டும் 48 வாக்காளர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். ஏதாவது ஒரு ஆங்கில எழுத்தை தந்தை பெயராக குறித்து ஆயிரக்கணக்கான வாக்காளர்களை சேர்த்துள்ளனர்.



**100 கோடியை எட்டும் வாக்காளர் எண்ணிக்கை**

இந்தியாவில் மொத்த வாக்காளர்கள் எண்ணிக்கை 100 கோடியை நெருங்கி இருக்கிறது. கடந்த ஜனவரி மாத அறிக்கையின்படி, தேர்தல் ஆணையம் வெளியிட்ட புள்ளிவிவரங்கள்:

| | |
|---|---|
| மொத்த வாக்காளர்கள் | 99 கோடி (முந்தைய ஆண்டை விட 2.2% அதிகரிப்பு) |
| ஆண்கள் | 50.7 கோடி |
| பெண்கள் | 48.3 கோடி |
| மூன்றாம் பாலினத்தவர் | 48,000 |

இவை எல்லாம் மகாதேவபுரா தொகுதியில் மட்டும் நடந்த முறைகேடுகள். இதுபோல நாடு முழுவதும் கோடிக்கணக்கான போலி வாக்கா ளர்கள் இருப்பதாக ராகுல் காந்தி குற்றம்சாட்டி உள்ளார். அவர்களின் வாக்குகளை வைத்து தான் பா.ஜ. க.வெற்றியை வசப்படுத்தி வருகிறது. எனவே இதுவரையிலும் வீசியது மோடி அல்ல, அது மோசடி அலை என்கின்றனர் எதிர்க்கட்சித் தலைவர்கள். தேர்தல் முடிவை திருட பா.ஜ.க.வுடன் தேர்தல் ஆணையம் கூட்டுச் சேர்ந்துள்ளது என்பதற்கான சான்றுகள்தான் இவை என ராகுல் காந்தி கூறி உள்ளார்.

இந்த குற்றச்சாட்டுகளை பா.ஜ.க.வும், தேர்தல் ஆணையமும் முற்றிலும் மறுத்துள்ளது. ராகுல் காந்தியின் இந்தக் குற்றச்சாட்டை தொடர்ந்து பீகாரில் போலி வாக்காளர்களை நீக்குவதற்காக வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த பணிகளை செய்யும் தேர்தல் ஆணையத்தின் நோக்கம் சாமானிய மக்களிடையேயும் மிகுந்த சந்தேகத்தையும் ஏற்படுத்தி உள்ளது.

இதற்கெல்லாம் தேர்தல் ஆணையத்தின் பதில் என்ன என மக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

நன்றி : **தினகரன்**
10.8.2025